# நவம்பர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | நடத்துபவர் / செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.11.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | திருவிருந்து / தினமும் என்பணி | அப் 3: 1 – 10 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 08.11.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | பற்றுறுதியில் உறுதிபட நிலைத்திருத்தல் | தாணியேல் 3:8–18 ரோமர் 4: 20 – 24 | திரு. ஜோசப் (லே – லீடர்) |
| 15.11.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | விளக்குதண்டின் மேல் ஒளிர்தல் | வி. பயணம் : 25 :31 – 40 மத் 5: 13 – 16 | அருள்திரு. அறிவர் D.சாமுவேல் ஜேக்கப் |
| 19.11.2015 வியாழன் | மாலை 6.30 மணி | **ஆண்டு விழா** | | ஆயர் / தலைவர் சிறப்பு செய்தியாளர் |
| 22.11.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | சிறுவர் ஞாயிறு (சிறுவர் ஒடுக்க கூட்டம்) 10,30மணியளவில் | எண்ணிக்கை 27: 1 – 11 மாற்கு 10 : 13 – 10 | ஆயர் / சிறப்பு செய்தியாளர் |
| 29.11.2015 ஞாயிறு | காலை 8.30 மணி | இறைவருகையில் மகிழ்ச்சி (அட்வெந்து) | எரேமியா 33:10 – 16 லூக்கா 1: 39 – 49 | ஆயர் |

## நவம்பர் மாதம் – 2015

# ஆயர்மடல்

என் அன்பு இறைமக்களே, உங்கள் அனைவருக்கும் திரியேகக் கடவுளின் இனிய நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இம்மாத வாக்குதத்தமாகிய

**நான் உனக்கு முன்னே போய்**
**கோணலானவைகளைச்**
**செவ்வையாக்குவேன்**

என்ற வாக்குதத்தத்தின் படியே உங்களின் முன்பாக போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். நமது ஒவ்வொரு குடும்பத்தின் பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆர்வத்தோடு ஆன்டவர் எதிர்நோக்குகிற காரியத்தில் நீங்கள் ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

## சங்கீதத்தின் சலுகைகள்

**சங்கீதம்**
நம் துயரத்தில் துணையும்
வருத்தத்தில் வாழ்வும்
வரட்சியல் வளமும் – தருவது.

**சங்கீதம்**
நம் உணர்வின் ஊன்று கோளும்
பாடுகளில் வழி தடமும்
துக்கத்தில் துயர் துடைக்கவும் – வருவது

**சங்கீதம்**
நம் தேவனை முழு இருதயத்தோடு துதிக்கவும்
தேவனை கீர்த்தனம் பண்ணவும்
பொல்லாத மனிதரிடம் இருந்து தப்பவும் உணர்த்துவது

**சங்கீதம்**
நம் இறைவனை வீணையோடும்
இறைவனை சுரமண்லத்தோடும்
துதிக்கவும் தூய சிந்தனை – ஊட்டுவது

**சங்கீதம்**
நம் கர்த்தரின் கிருபைகளை பாடவும்
வசனத்தின்படி தன் வழியை
காத்துக் கொள்ளவும் – வழி வகுப்பது

**சங்கீதம்**
நம் வீண் சிந்தனையை வெறுத்து
மறைவிடங்களில் நமக்கு
கேடகமாக நின்று – உதவுவது

**சங்கீதம்**
நம் அனைவரின் வாழ்வுக்கு வெளிச்சம்
கர்த்தரை நோக்கி கூப்பிடுபவனுக்கு
அடைக்கலமுமாய் – இருப்பது.

**சங்கீதம்**
நம் கர்த்தரை துதிக்கவும்
கர்த்தரை கீர்த்தனம் பண்ணவும்
கர்த்தரின் பராக்கிரமத்தை அறியவும் – உகந்தது

நீதிமான் பனைப்போல செழிப்பான் என்பது
வேத வாக்கு அது நமக்கு தேவ வாக்கு

பா. ஏவாள் மோனா மெட்டில்டா





## கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

### பாமாலை 238

### JESUS LOVES ME THIS I KNOW ( S.S.1155)

### “இயேசு எந்தன் நேசரே”

“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவைகளைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்ஜியம் அப்படிபட்டவர்களுடையது”

– லூக்கா 18: 16

ஒரு ஊரில் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் அன்னவார்நேர் (ANNA WARNER) மற்றும் சுசன் வார்நேர் (SUSAN WARNER) . இருவரும் குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதுவதிலும், கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

ஒரு நாளில் சுசன் வார்நேர் என்பவர் “சே அண்டு சீல்” (SAY AND SEAL ) என்ற நாவல் கதையை எழுதும் போது, ஒரு கதாபாத்திரத்துக்கு பேசும் வாசகமாக ஒரு கவிதையை எழுதி தரும்படியாக அவர் சகோதரியிடம் கேட்டார். அதுவும் ஒரு அழுகின்ற, கவலையாய் இருக்கின்ற குழந்தைக்கு ஆறுதலூட்டும் கவியாய் எழுதும்படியாக கேட்டுக் கொண்டார். அதற்காக அன்ன அவர்கள் எழுதிய கவிதை தான் இந்த பாடல் வரிகள்.

1862 ஆம் ஆண்டு வில்லியம் பிரட்புரி (WILLIAM BRADBURY) என்பவர் தான் இயேசு என் நேசர் என்கின்ற பல்லவியை இப்பாடலுடன் இணைத்தார் மேலும் அவரே இப்பாடலுக்கு இசை அமைத்தும் விட்டார்.

இப்பொழுது இந்த பாடல் மிகவும் பிரபலமாகி, பல நாடுகளில், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு,மிகவும் ஆர்வத்துடன் பாடப்படுகிறது. 150 ஆண்டுகளுக்கு மேலே இது புகழ்பெற்றுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

சிறுவர் தினம் (Nov. 14) கொண்ட இந்த மாதத்தில் இந்த பாடலை சிறுவர்களுடன் சேர்ந்து நாமும் பாடலாமா? குழந்தையின் உள்ளம் போல ஆறுதல் அடைவோமா?

“இயேசு என் நேசர்
இயேசு என் நேசர்
இயேசு என் நேசர்
மெய் வேத வாக்கிதே”

- Nishada’s

# BIRTHDAYS IN THE MONTH OF NOVEMBER

| | | | |
|---|---|---|---|
| November 1 | Mrs.Meroline Albert | November 15 | Miss. T. Teena Jercy |
| November 1 | Miss. T. Mercy Jeevarathina | November 17 | Mrs. Evangelin Benjamin |
| November 1 | Baby. S. Mellona Catherine | November 17 | Mr. G.K.David |
| November 2 | Miss. J.Jesintha Jebamalar | November 18 | Mrs. Gnanammal |
| November 4 | Mr. H. J. Santhosh Raj | November 20 | Mrs. Stella deborah |
| November 6 | Mr. Ranjith Samuel | November 21 | Master. A. John Peter |
| November 6 | Dr. R. Anish Daniel | November 23 | Mr. R. Kinson Raja |
| November 9 | Mrs. Lancy Charles | November 25 | Mr. R. Raja Singh |
| November 10 | Mrs. Manju Violet Elizabeth | November 26 | Mr.R. Golden Bennet |
| November 10 | Mr. E. Titus Jacob | November 26 | Mrs. Valsamma |
| November 11 | Mr. P.Jeffrey Matthew | November 28 | Dr. W. Hanna Melki |
| November 11 | Master G.Bento Thomas | November 28 | Mrs. Mercy Ida Franklin |
| November 12 | Mrs. Reena Jasmine Fruito | November 28 | Mr. G. R. Clement |
| November 12 | Miss. J. Hannah Josephine | November 29 | Mr. Blessline V. Shine |
| November 14 | Dr. Nisha Daniel. R | November 30 | Mrs. Mercy Edwin |
| November 14 | Mr. Manuel Raj Stephen | | |

# WEDDING DAYS IN NOVEMBER

November 1 Mr. E. B. Anbazhagan & Mrs. A. Glory Anbazhagan

November 22 Mr. A. Moses & Mrs. S. Kalyani

November 27 Mr. V. Praveen Babu & Mrs. P. Selvamani

November 27 Mr. D. Baskar & Mrs. Esther Juliet

November 27 Mr. A. Alwin Jackson & Mrs. G. Evangelin Lincy

**பிறந்த நாள் மற்றும்**
**திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**





# Important Days in November



November 1 All Saints Day

November 2 All Soul's Day

November 7 Infant Protection Day

World Cancer Awerness Day

November 8 International Day of Running

November 9 Legal service day

November 10 World Science day for Peace and development

November 11 National education day

November 13 World Kindness Day

November 14 Children's Day

World Diabetics day

November 16 International Day of Tolerence

November 20 Universal Children's Day

World Day of Prayer and Action for Children

November 21 World Television Day

November 25 International Day on Violence Against Women

November 26 National Law Day

November 30 Flag Day






















# வேத வினா - விடை போட்டி

## நவம்பர் மாத கேள்விகள்

### எபேசியர் (வசன ஆதாரம் தரவும்)

1. தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் யார் சுதந்திரமடைவதில்லை?
2. ஆவியின் கனி எதில் விளங்கும்?
3. ஒளியின் பிள்ளைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
4. தீ க்கு என்பவன் யார்?
5. நாம் எந்த விதத்தில் ஜெபம் செய்யவேண்டும்
6. பழைய மனிதன் யார்?
7. புதிய மனிதன் யார்?
8. இயேசு கிறிஸ்து மனிதர்களுக்கு என்னென்ன வரங்களை கொடுத்தார்?
9. நாம் ஏன் தேவனுடைய சர்வாயுதலர்க்கத்தையும் தரித்து கொள்ள வேண்டும்?
10. காலில் கிடந்தவன் கழற்றி விடப்பட்டான் காலடியில் கிடந்தவளோ
காலமெல்லாம் வாழ்வு பெற்றாள் - அவள் யார் ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-11-2015**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை - 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

**வருந்துகிறோம்**



நமது ஆலய பணியாளர் திரு.ஜேம்ஸ் மதுரம் அவர்களின்
பேரன் **மாஸ்டர் M.உதயா** (வயது 3)
31.10. 2015 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்,



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. ரோமர் 1 : 9
2. ரோமர் 1 : 10 - 15
3. ரோமர் 3 : 28
4. ரோமர் 2 : 7
5. ரோமர் 2 : 28 - 29
6. ரோமர் 2 : 2
7. ரோமர் 1 : 18
8. ரோமர் 2 : 4
9. ரோமர் 11 : 22
10. ரோமர் 10 : 23 மரணம்

## பத்து கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கீதா ஹென்றி
3. திருமதி. ஜாய்ஸ் விமலா
4. திருமதி. தேவ ரோசலின்
5. திருமதி. கலா சுந்தரகுமார்
6. திருமதி. ஷைனி ரிச்சர்ட்

**படித்ததில் பிடித்தது**

வேதத்தை வாசித்தால் அது - வளர்ச்சி
தினம் அதை தியானித்தால் அது - தேர்ச்சி
அதன்படி வாழ முயற்ச்சித்தால் அது - பயிற்சி
உள்ளபடி வாழந்து காட்டினால் அது - முதிர்ச்சி
இவைகளில் ஒன்றிலாகிலும் இராவிட்டால்
நம் வாழ்க்கையே போச்சி!!

# ஜெபிக்க!

**டிசம்பர் மாத கீத பவனிக்காக! கிறிஸ்மஸ் நிகழ்வுகளுக்காக!**
**சிறுவர் ஞாயிறு தினத்திற்காக!**

# கடந்த மாத சிறப்புக்கட்டுரையின் தொடர்ச்சி

## இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற ஏழு முக்கியமான ஆசீர்வாதங்கள்

**5.சோதனைகள் வெற்றி**

இந்த உலக வாழ்க்கை யாருக்கும் சுகமானதோ, நீண்ட கால சொகுசானதோ அல்ல. கற்றவன், கல்லாதவன், எழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி சோதனைகளும் கஷ்டங்களும், பாடுகளும், சோர்வுகளும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு வடிவத்தில் வரும் பணத்தைக் கொண்டும், ஆள்பலத்தைக் கொண்டும் தீர்வுகாண இயலாத பிரச்சனைகள் வாழ்க்கையில் பல உண்டு.

எனவேதான் சுய வலிமையை சார்ந்து வாழும் ஒரு வாழ்க்கையை வேதம் சபிக்கப்பட்ட வாழ்க்கை என்று சொல்கிறது. அதே வேளையில் தேவன் மேல் நம்பிக்கை வைத்து நம்பி இருக்கும் வாழ்க்கையை வேதம் பாக்கியமான வாழ்க்கை என்று கூறுகிறது. (எரேமியா – 17:5,7)

இயேசு கிறிஸ்துவினால் நாம் அடைகின்ற முக்கியமான இன்னொரு ஆசீர்வாதம் நம்முடைய சோதனையும், வேதனையும் மிகுந்து வாழ்கையில் நம்மை தாங்குவதற்கு ஏற்ற ஒருவரை பெற்றுக்கொள்வதாகும். கிறிஸ்துவை பின்பற்றும் வாழ்க்கையிலும் பலவித சோதனைகளையும், கஷ்டங்களையும் நாம் சந்திக்க நேரிடும். ஆனால் அவைகளுக்கு முன்னால் நாம் தனிமையாக நிற்கவில்லை. கர்த்தர் நம்மோடிருப்பார்.

அநேகருக்கு நிகழுவது போன்று பலவித கஷ்டங்களை நாம் சந்திக்க நேரிட்டாலும் தேவ ஐக்கியத்தாலும், தேவ வல்லைமையாலும் அவைகளை நாம் ஜெயிக்க முடியம். கர்த்தர் நம்மோடிருந்து எல்லா சோதனையின் பாதைகளையும் வெற்றியாக கடந்து போகச் செய்வர்.

ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் நாங்கள் எப்பக்கத்தில் நெருக்கப்பட்டாலும் ஒடுங்கி போவதில்லை என்று எழுதினான். (11 கொரி 4:8 ) சில நேரங்களில் நம்முடைய சுய பலத்தாலோ, ஞானத்தாலோ சந்திக்க இயலாத பிரச்சனைகளை, வெற்றியாக சந்தித்து தீர்வு காண கர்த்தர் கிருபை செய்கின்றார். சில நேரங்களில் சில சோதனைகள் உடனடியாக நீங்காவிடினும் அவைகளைத் தாங்கவும், சகிக்கவும் தேவையான கிருபைகளையும், தேவ ஆற்றல்களையும் அருளுகிறார்.



ஆம். இயேசு கிறிஸ்துவுடன் நம்பிக்கையோடு நம்முடைய வாழ்க்கை தொடரலாம். வாழ்க்கைப் பாதையில் எது நேரிட்டாலும், அவர் நம்மோடிருந்து ஏற்றவிதமாக நம்மைத் தாங்கி வழி நடத்துவார்.

**6. நித்திய வாழ்வு**

ஏழை பணக்காரன், பாமரன் படித்தவன் என்ற வேறுபாடின்றி இந்த உலகம் யாவருக்கும் நிலையற்றதே. ஆயிரம் ஆண்டுகளுக்கு போதுமான அளவிற்கு செல்வங்களை குவித்து வைத்தாலும், வாழ்வதற்கு மனிதனுக்கு நியமிக்கப்பட்ட காலங்கள் மிக மிகக் குறுகினவையே. ஆம். இந்த வாழ்வு குறுகியதும் மன சஞ்சலமுமானதே. இந்த உலகத்தில் யாருடைய வாழ்க்கை சுகத்திற்கும், சவுகரியத்திற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. இந்த நிலையற்ற உலக வாழ்க்கையின் யதார்த்த நிலைகளை புரிந்து கொண்ட தேவ பக்தனாகிய மோசே எங்கள் நாட்கள் எண்ணும் அறிவை எங்களுக்கு போதித்தருளும் என்று கடவுளை நோக்கி பிரார்த்தித்தான்.

ஆபிரகாம் என்ற பழம் பெரும் தேவ மனிதன் மிகுந்த செல்வந்தானாயிருந்தும் தேவன்தாமே கட்டியெழுப்பிய அஸ்திபாரமுள்ள நகரத்திற்காக காத்திருந்தான் என்று வேதத்தில் படிக்கின்றோம். ( எபி – 11: 10) ஏனென்றால் இந்த உலக வாழ்க்கை நிலையானதல்ல என்ற சரியான புரிந்து கொள்தல் அவனுக்கிருந்தது. அதே நேரத்தில் இந்த நிஜமற்றதும், நிலையற்றதுமான உலகத்திற்கு அப்பால் என்றென்றும் அழியாத நித்தியமான ஒரு உலகம் உண்டு என்ற வெளிப்பாடும் அவனுக்கிருந்தது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் நாம் அடைகின்ற மிக முக்கியமான ஆசீர்வாதம் நித்திய வாழ்வு ஆகும். இந்த நித்திய வாழ்வுக்குநேராக நாம் கவனம் செலுத்தி, அதற்கேற்ப செயல்படுவதே ஆவிக்குரிய வாழ்க்கை ஆகும். நித்திய வாழ்வை நாம் ஒவ்வொருவரும் பெறுவதற்காகவே இயேசு கல்வாரி சிலுவை நமக்காக நிவாரணம் செய்து தம்முடைய ஜீவனை நமக்காக அளித்தார்.

ஆண்டவராகிய இயேசுவை நம்முடைய வாழ்க்கையில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதின் வாயிலாக என்றென்றும் நிலைத்து நிற்கும் ஒரு நித்திய வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு நாம் பங்காளிகளாக மாறுகின்றோம்.

அந்த மறுமையின் வாழ்வில் துக்கமோ, துயரமோ, கண்ணீரோ, கவலையோ இல்லை. அந்த வாழ்கையைக் குறித்த ஒரு நிச்சயம் இந்த உலகத்தில் நாம் சந்திக்க நேரிடுகின்ற எல்ல கஷ்டங்களையும் துன்பங்களையும், வருத்தங்களையும் நம்பிக்கையோடு சந்தித்து கடந்து செல்ல நமக்கு உதவி செய்கிறது.

**7. வழி நடத்துதல்**

மனிதனுக்கு தேவன் மிகுந்த ஞானத்தையும், அறிவையும், திறமைகளையும் அளித்துள்ளார். அந்த ஞானம், அறிவு, திறமை ஆகியவற்றைக் கொண்டு அவன் சிறப்பாக யோசிக்கவும், திட்டமிடவும், செயல்படவும் முடியும் ஆயினும் இந்த வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதற்கும், எப்படி வாழ்க்கை சூழ்நிலைகளை சந்திப்பது என்பதற்கும் ஒரு விசேஷ ஞனமும், புத்தியும் தேவைப்படுகிறது.

எங்கோ இருக்கிற சந்திரனுக்கு போகக் கூட மனிதனால் ஒரு வழியை கண்டுபிடிக்க முடிந்தது என்பது உண்மைதான். ஆயினும் வெற்றியான ஒரு வாழ்க்கைக்கு நேராக செல்ல தேவனுடைய விசேஷ நடத்துதலும், ஆலோசனையும் அவனுக்குத் தேவைப்படுகிறது.

ஆம் வாழ்க்கை வழி காட்டுதல் என்பது மிக மிக வித்தியாசமான ஒரு விஷயம். ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்த ஏற்றுக்கொள்ளும் போது, நாம் தேவ ஆலோசனைகளையும் தெய்வீக வழி நடத்துதல்களையும் பெற்றுக்கொள்ள மேன்மையான ஒரு வாய்ப்பு கிட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளைகள் என்ற ஆவிக்குரிய அந்தஸ்தை அடைகின்ற ஒவ்வொருவரும் தேவ ஆவியினால் வழி நடத்தப்படுகின்ற ஒரு மேலானஆசீர்வாத வாய்ப்பை பெறுகின்றனர். சத்திய ஆவியானவர் வரும்போது அவர் உங்களை சகல சத்திய ஆவியானவர் வரும்போது அவர் உங்களை சகல சத்தியதிற்கு நேராகவும் நடத்துவார் என்று கூறுகின்றது. (யோவான் – 16:13) அவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறார்கள் என்று வேதம் கூறுகின்றார்.(ரோமர் – 8:14)



வாழ்க்கையில் குழப்பமான சூழ்நிலைகளிலே, தடுமாறும் நேரங்களிலே, எதை செய்வது, எப்படி செய்வது என்று அங்கலாய்த்து நிற்கையிலே தேவ ஆவியானவர் நமக்கு சரியான ஆலோசனைகளையும், வழிநடத்துதல்களையும் தந்து செவ்வையான பாதையில் நடத்துகின்றார்.

நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளை சரியான பாதையில் நடத்தி, அவைகளை திருப்தியாக்குவது போல, கர்த்தர் நமக்கு நல்ல மேய்ப்பராயிருந்து நம்மை சமாதானத்தின் பாதையிலும், சந்தோஷத்தின் பாதையிலும் நடத்துகின்றார். கர்த்தருக்கு ஆலோசனை கர்த்தர் என்ற பெயருமுண்டு (ஏசாய – 9:6)

இந்த உலக வாழ்க்கையில் நம்மை கரிசனையாக நடத்திச்செல்ல ஒரு நல்ல தெய்வம் நமக்கிருப்பது எத்தனை பெரிய பாக்கியம்.

கட்டுரைக்கு உதவிய நூல்
**வழிநடத்தும் தேவனுடன்**

உங்கள் அன்பு சகோதரன்
**- A.Joseph** M.Sc.,M.A.,BBA.,DMLT.,
Lay Preacher / Lay Leader

## Success Formula

Never be Late
Live Simple
Expect Little
Work More
Smile Always
Think Positive
Don’t Argue
Be Confident.




